**தொடங்கொட பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 16 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தொடங்கொட பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய உறுப்பினர் படிகள் ரூபா 30,000 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய, 2016 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 540,839 கூட்டுத்தொகையான மூலதன மானியம், மீளாய்வாண்டின் மூலதன மானியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் 2.2(உ) ஆம் பந்தியில் கடன்பட்டோர் கணக்கில் அதிகரித்து செலவு வைக்கப்பட்ட ரூபா 264,409 தொகையை சரிசெய்வதற்காக கடன்பட்டோர் கணக்கு அந்த அளவினால் வரவு, வைக்கப்பட்டு திரண்ட நிதியக் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் ஏக்கர் வரி அதிகரித்து மதிப்பீடு செய்யப்பட்டதை சரிசெய்வதற்காக நாட்குறிப்பு இலக்கம் 35 இன் பிரகாரம் ரூபா 194,760 தொகை திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏக்கர் வரிக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், பேரேட்டுக் கணக்குகளில் உரிய செலவுப் பதிவுகள் மாத்திரமே இடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ஏக்கர் வரி வருமானம் ரூபா 194,760 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் கடன்கொடுத்தோர் கொடுப்பனவுகள் ரூபா 47,413 தொகை கடன்கொடுத்தோர் கணக்கில் குறைவாகப் பதியப்பட்டதனால்

கடன்கொடுத்தோர் மீதி அப்பெறுமானத்தால் அதிகரித்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) காணி ஏல விற்பனையின் போது பொது வசதிகளுக்காக 1994 ஆம் ஆண்டு முதல் 2015 வரையான காலத்தில் சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்த மொத்தமாக 31 ஏக்கர், 1 றூட், 5 பேர்ச் அளவான காணியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

(அ) நூலகப் புத்தகங்களின் கொள்வனவு செலவினப் பேரேட்டின் பிரகாரம் ரூபா 104,122 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 136,821 ஆனமையால் ரூபா 32,699 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கடன்கொடுத்தோர் பட்டோலையில் தொடங்கொட கந்தனகொட வீதியில் சணச சங்க மண்டபம் வரையான வீதியை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக கடன்கொடுத்தோராக ரூபா 402,254 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட கோவையின் பிரகாரம் அது ரூபா 401,064 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,652,945 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,035,198 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 4,957,928 தொகையான நிலுவை வருமானம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 25,458,971 தொகையொன்று பின்வருமாறு கிடைக்கவேண்டியிருந்தது.

| | **ரூபா** |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 17,535,530 |
| முத்திரைக் கட்டணம் | 7,923,441 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மரணமடைந்த, ஓய்வு பெற்ற மற்றும் பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற 23 உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 62,527 கூட்டுத்தொகையான கடன் மீதியை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1981, 2006, 2011 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்ட ரூபா 288,779 தொகையான முற்பணம் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 140 இன் பிரகாரம் 2016 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 காணிகளைக் கூறிடல்

1992 செப்தெம்பர் 30 ஆந் திகதிய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அபிவிருத்தி பிரமாண சுற்றறிக்கையின் இலக்கம் 6 மற்றும் 2.1 ஆம் பந்தி மற்றும் 1986 மார்ச் 10 ஆந் திகதிய அவ்வதிகாரசபையின் 393/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கட்டளை இலக்கம் 22(i) இன் பிரகாரம் காணி கூறிடல் தொடர்பாக சபை நடவடிக்கை எடுக்காதிருந்த சந்தர்ப்பங்கள் 2015 செப்தெம்பர் 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தெரிவு மற்றும் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) 07 காணி கூறிடல்களிலிருந்து சபைக்கு கையளிக்கப்பட்ட முறையே 18.2 , 67.5, 169.75, 127.5, 146 மற்றும் 64.4 பேர்ச் அளவான காணிப் பகுதிகளுக்குரிய உரித்துறுதியை சபைக்குப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரையிலும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பொது வசதிகளுக்காக சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்த கஜுகஹவத்த கொட்டயாஹேன மற்றும் பெட்டிகலவத்த இல் 126.5 பேர்ச் மற்றும் 67.5 பேர்ச் தொடர்பாக 2015 செப்தெம்பர் 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அந்த காணிகளின் எல்லைப் புள்ளியை இலகுவாக இனங்காணக்கூடிய வகையில் இனங்காணும் அடையாளம் இட்டு எல்லைப் புள்ளி பிரிக்கப்படாதிருந்ததுடன் அது சபைக்குரிய பொது காணிப் பகுதியாக இனங்காணக் கூடியவாறு சபையின் பெயர்ப்பலகையும் அதில் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலவரைபட இலக்கம் 3612005 , 3622005 இன் மூலம் கூறிடல் அங்கீகரிக்கப்பட்டிருந்த கந்தனகொட காட்டுக் காணியின் அளவு 602.3 பேர்ச் ஆனமையால் அதில் 10 சதவீதமான அளவான 60.23 பேர்ச் காணிப்பகுதி சபைக்குக் கையளிக்கப்பட வேண்டிய போதிலும், 44 பேர்ச் காணிப்பகுதியே கையளிக்கப்பட்டிருந்தது. சபைக்குச் செலுத்தப்பட்ட 1 சதவீத வரித்தொகையுடன் ஒப்பீடு செய்த போது சபைக்குக் குறைவாக கையளிக்கப்பட்ட காணியின் அளவு 16.23 பேர்ச் ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 292,140 ஆகும்.

**4.** **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்